# செய்தி வெளியீடு

## இலங்கையின் பொருளாதாரம் 2019 முதலாம் காலாண்டில் 3.7 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது.

## தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2019 முதலாம் காலாண்டு

**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
பொது வழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு **அமைச்சு**

**தொ.பே:** 94-011-2147071 **தொ.நகல்:** 94-011-2877938 **மின்னஞ்சல்:** national.accounts@statistics.gov.lk

இலங்கையின், 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான (ஜனவரி, பெப்ரவரி, மார்ச்) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும், அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதம் 3.7 சதவீதமென தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது. நிலையான (2010) விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019 முதலாம் காலாண்டில் ரூபா 2,326,273 மில்லியன்களாக பதிவு செய்ததுடன் , 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ரூபா 2,242,552 மில்லியன்களாக பதிவு செய்தது.

பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள், நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இக் காலாண்டில் தமது பங்களிப்பினை முறையே 6.9 சதவீதம், 31.6 சதவீதம், 53.9 சதவீதம் மற்றும் 7.7 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளது.

2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவான 5.1 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடும் போது விவசாய நடவடிக்கைகள், இக் காலாண்டுப் பகுதியில் மேலும் 5.5 சதவிகிதம் சாதகமாக விரிவடைந்துள்ளது. கைத்தொழில் நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 3.0 சதவிகிதம் திருப்திகரமாக வழங்கும்போது, 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் இது 1.7 சதவீதமாக பதிவு செய்து இருந்தது. சேவைகள் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டு 4.1 சதவீதத்தால் மேலும் விரிவாக்கம் அடைந்துள்ளது.

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், 2018 முதல் காலாண்டோடு ஒப்பிடும்போது இந்த காலாண்டில் அரிசி வளர்ப்பு 13.1 சதவீதம் அதிகரித்துள்ளது. ‘எண்ணைப்பசை

கொண்ட பழவகைகளின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக' 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 15.7 சதவீதமாக பதிவான எதிர்மறை வளர்ச்சி விகிதத்துடன் ஒப்பிடும்போது இந்த காலாண்டில் 35.6 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. இதேவேளை 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 'கால்நடை உற்பத்தி', 'பழவகைகளின் வளர்ச்சி', தாவர பரப்புதல் நடவடிக்கைகள் மற்றும் விவசாயத்திற்கான ஆதரவு சேவைகள்' ,'காய்கறிகளின் வளர்ச்சி', என்பன கணிசமான வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளது: அவை முறையே 9.4 சதவீத, 8.1 சதவீத 6.9 சதவீத மற்றும் 4.7 சதவீதங்களாகும். உப பிரிவுகளான 'தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக)', 'கடல் மீன்பிடி', மற்றும் 'தேயிலை வளர்ச்சி', என்பன 2019 முதலாம் காலாண்டில் முறையே 12.9 சதவீத, 2.0 சதவீத மற்றும் 1.7 சதவீத சுருக்கங்களைக் காட்டியது.

கைத்தொழில் நடவடிக்கையில் உப பிரிவுகளான 'கட்டடவாக்கம்', மற்றும் 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' முறையே 6.9 சதவீத மற்றும் 5.8 சதவீதத்தால் வளர்ச்சி அடைந்துள்ளது. தயாரிப்புத்துறை நடவடிக்கைகளுக்குள் 'சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் 94.8 சதவீத குறிப்பிடத்தக்க விரிவை பதிவு செய்யும்போது ''தளபாட தயாரிப்பு'', ' உணவு, பானம், மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு', 'புடவை மற்றும் அணியும் ஆடைகளின் தயாரிப்பு', 'இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் தயாரிப்பு', 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் முறையே 5.7 சதவீத 2.3 சதவீத 1.9 சதவீத மற்றும் 1.6 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்கின்றன. இதேவேளை 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 'மரம் மற்றும் மர உற்பத்திகளின் தயாரிப்பு'', 'தாள் மற்றும் தாள் உற்பத்தி, அச்சுப்பதிப்பு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு', மற்றும் 'அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்' முறையே 23.0 சதவீத, 11.2 சதவீத மற்றும் 10.5 சதவீத சுருக்கங்களைக் காட்டியது. இக் காலப்பகுதியில் உப பிரிவுகளான 'மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் செயற்பாடு' நீர் சேகரிப்பு , சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் என்பன முறையே 0.6 சதவீத, 6.4 சதவீதத்தால் மேலும் விரிவாக்கம் அடைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் சேவைத் துறையின் நடவடிக்கைகளுள் 'தொடர்பாடல்', 'தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள்', நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 15.1 சதவீத மற்றும் 11.7 சதவீதங்களை காட்டுகின்றன. இதேவேளை 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', 'நிகழ்ச்சித் திட்டமிடல் மற்றும் ஒலிபரப்புச் செயற்பாடுகள்', 'காப்புறுதி நடவடிக்கைகள்','ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள்', 'தங்குமிடம் மற்றும் உணவுப் பணிச் செயற்பாடுகள் ', 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்துதல் என்பன முறையே 9.8 சதவீத, 8.1 சதவீத, 8.0 சதவீத, 4.6 சதவீத, 4.5 சதவீத, 4.4 சதவீத மற்றும் 1.8 சதவீதங்களால் விரிவாக்கம் அடைந்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2019 ஆம் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

திருமதி. ஐ.ஆர். பண்டார

**பணிப்பாளர் நாயகம்**
**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**